**சட்ட அமுலாக்கல் பிரிவினரால் (பொலிஸ் மற்றும் இராணுவம்) கைதுசெய்யப்பட்டவர்களின் உரிமைகள்**

மூலம்: 2018ம் ஆண்டின் 5ம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றி சர்வதேச சமவாயச் சட்டம்

1. **சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர் என்பவர் யார்?**

   ஒரு இடத்தில் அடைத்து வைக்கப்படுவதற்குச் சம்மதிக்காத ஆளொருவர், அவ்வாறு அடைத்து வைக்கப்பட்டிருந்தால் அவர் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர் ஆவார். (சட்டத்தின் 25ம் பிரிவு)

2. **சுதந்திரம் இழப்பிக்கப்படுதல் என்பது கைதுசெய்யப்பட்டுள்ளமைக்கான முறையான சொல்லா?**

   ஆம்.

3. **சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர் ஒருவரின் உரிமைகள் யாவை?**

   ஆளொருவர் இரகசியத்தடுப்பில் வைத்திருக்கப்படுதலாகாது. (பிரிவு 15(1))

   சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எவரேனுமாள், எழுத்திலான சட்டத்தினால் நிலைநாட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு மட்டும் அமைய, அவரது உறவினர்கள், சட்டத்தரணி அல்லது அவர் விரும்பிய வேறேனும் ஆள் என்போருடன் தொடர்புகொள்வதற்கும் அவர்களினால் பார்வையிடப்படுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும். (பிரிவு 15(2))

   சந்தேகநபரொருவருக்கு, அவர் கைது செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் தன்மை குறித்து அவருக்கு தெரியப்படுத்தப்படாவிட்டால், பொலிஸ் அதிகாரி பிடியாணை இல்லாமல் அவரைக் கைது செய்வது நியாயமானதாக இருந்தாலும் கூட, குறித்த சந்தேகநபரின் கைதானது சட்டவிரோதமானதாகும். (முத்துசாமி எதிர் கன்னங்கர ((1951) 52 என்.எல்.ஆர். 324)

4. **சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட நபர் ஒருவரின் உறவினர்கள், பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்களாவார்கள் (பிரிவு 16(1)):**

   - சுதந்திரம் இழப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிட்ட ஆள் அல்லது அதிகாரி;

[1] http://www.documents.gov.lk/files/act/2018/3/05-2018_S.pdf

- அவ்வாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டு, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்கு அவர் சேர்க்கப்பட்ட திகதியும், நேரமும், இடமும்;

- சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி;

- சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட வேறோர் இடத்துக்கு இடமாற்றப்படும் பட்சத்தில், சேரிடமும், இடமாற்றத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும் உட்பட, சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆள்
- இருக்குமிடமும்;

- விடுவிக்கப்பட்ட திகதியும், நேரமும், இடமும்;

- சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் உடல் நல நிலைமை தொடர்பான தகவல்;

- சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட காலத்தின்போது மரணம் ஏற்படும் பட்சத்தில், மரணத்தின் சூழ்நிலைகளும் காரணமும், எச்சங்களின் சேரிடமும்.

- உறவினர்கள், பிரதிநிதிகள், மற்றும் சட்டத்தரணிகள் மற்றும் புலனாய்வில் பங்குபற்றுகின்ற ஆட்கள் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளொருவர் சம்பந்தமான தகவலைத் தேடுவதன் விளைவாக ஏதேனும் இழிவான நடாத்துகை, அச்சுறுத்தல் அல்லது அழுத்தம் என்பவற்றிற்கெதிராகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும். (பிரிவி 16(2))

5. **பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரொருவருக்கு சட்டத்தரணியை நாடும் உரிமையுண்டா?**

ஆம். அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி (பிரிவு 10அ(1) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்), பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மறியலில் வைக்கப்பட்டுள்ள, அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆளொருவரை பிரதிநிதித்துவம் செய்யம் சட்டத்தரணிக்கு,

- அவ்வாளை நாடுவதற்கும்,
- அவ்வாள் சார்பில் பிரதிநிதித்துவங்களைச் செய்வதற்குமான உரிமையுண்டு.

இவ்வுரிமைகள் இச்சட்டத்தின் கீழ் விதந்துரைக்கப்பட்ட சட்வொழுங்குவிதிகள் மற்றும் ஏனைய எழுத்துமூலச் சட்டங்களின் நிபந்தனைகளுக்கு மட்டுமே உட்பட்டவை

6. **பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரொருவருக்கு குடும்பத்தினரை தொடர்புகொள்ளும் உரிமையுண்டா?**

ஆம். 2018ம் ஆண்டின் 5ம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றி சர்வதேச சமவாயச் சட்டத்திலுள்ள உரிமைகள் குறித்த நபர்களுக்கு வழங்குபடியாகும்.
மேலும், அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி (பிரிவு 10அ(2) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்), பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மறியலில் வைக்கப்பட்டுள்ள, அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆளொருவருக்கு, எழுத்துமூலச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதன் படி, தனது உறவினர்களோடு தொடர்பாடல் செய்வதற்கான உரிமை இருக்கிறது.

7. **எனக்குத் தெரிந்த எவரேனும் ஆளொருவர் கைதுசெய்யப்பட்டால் அல்லது தடுத்து வைக்கப்பட்டால் நான் என்ன செய்வது?**

- மேலே 4ம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை கைதின் போது கேட்கவும்.
- கைது செய்யும் அதிகாரியின் பெயரையும், கைது செய்யப்படும் நபர் அழைத்துச் செல்லப்படும் இடத்தையும் கேட்டுப்பெற்றுக்கொள்ளவும்.
- அவர்கள் பயணம் செய்யும் வாகனத்தின் இலக்கத்தை குறித்துக்கொள்ளவும்.
- சட்டத்தரணியொருவரின் உதவியை நாடவும்.
- இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவிப் பிரிவின் சித்திரவதை எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் 24 மணிநேர தொலைபேசிச் சேவையான 0777144004 என்ற எண்ணுக்கு தொலைபேசியினூடாக அறியத்தரவும்.
- 1996 என்ற இலக்கத்தினூடாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினைத் தொடர்பு கொண்டு முறைப்பாடொன்றைப் பதிவு செய்யவும்.

8. **ஆளொருவரை தடுத்துவைக்கும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் கடமைகள் எவை?**

- ஆட்களின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்டுள்ள இடங்களை அணுகும் உரிமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உண்டு. (பிரிவு 15(3))
- சட்ட அமுலாக்கல் அதிகாரிகள், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆட்கள்பற்றிய நாளதுவரையாக்கப்பட்ட அலுவலகமுறையான இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் தொகுக்கப்படுவதனையும் பேணப்படுவதனையும் உறுதிப்படுத்தவேண்டும். (பிரிவு 15(4))
- மேற்சொன்ன இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் நீதிமுறை அல்லது வேறு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிறுவனத்திற்கு, கோரிக்கையின் மீது அவை உடனடியாகக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும். (பிரிவு 15(4))
- மேற்சொன்ன இடாப்புக்கள் அல்லது பதிவேடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும் (பிரிவு 15(4)):

அ. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் அடையாளம்.

ஆ. அவ்வாளின் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட தேதியும், நேரமும், இடமும், அவ்வாளின் சுதந்திரத்தை இழப்பித்த அதிகாரியின் அடையாளமும்

இ. சுதந்திரம் இழப்பிக்கப்படுவதற்குக் கட்டளையிட்ட அதிகாரியும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமைக்கான ஏதுக்களும்.

ஈ. சுதந்திரம் இழப்பிக்கப்பட்டமையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி.

உ. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடமும், சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட இடத்துக்குச் சேர்க்கப்பட்ட தேதியும், நேரமும், சுதந்திரம் இழப்பிக்கப்பட் இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும்.

ஊ. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட ஆளின் உடனல நிலைமை தொடர்பான தகவல்.

ஏ. சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட காலத்தின்போது மரணம் ஏற்படும் பட்சத்தில், மரணத்திற்கான சூழ்நிலைகளும் காரணமும், எச்சங்களின் சேரிடமும்.

ஏ. விடுவிக்கப்பட்ட அல்லது சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட வேறோர் இடத்திற்கு இடமாற்றப்பட்ட தேதியும், நேரமும், ஆளொருவர் சுதந்திரம் இழப்பிக்கப்பட்ட எந்த இடத்திற்கு இடமாற்றப்படுகின்றாரோ அந்தச் சேரிடமும், இடமாற்றத்திற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியும்.